தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2026

**12 வயதுப்பிரிவு**
**(01.01.2014 – 31.12.2014 வரையில் பிறந்தோர்)**

## வட்டுக்கோட்டைத் தீர்மானம்

ஈழத்தமிழினம் தமது தாய்நாட்டில் சுதந்திரமாகவும் தன்னாட்சி உரிமையோடும் வாழ்கின்ற நிலை சிங்கள அரசால் மறுக்கப்பட்டபோது, அதற்கு எதிராக அமைதிவழிப் போராட்டங்கள் தமிழ் அரசியல் தலைவர்களாலும் மக்களாலும் முன்னெடுக்கப்பட்டன. இப்போராட்டங்களை சிங்கள ஆட்சியாளர்கள் ஆயுத வழியில் அடக்கினர். அத்தோடு சட்டங்களை நிறைவேற்றி தமிழரை ஒடுக்கினர்.

பன்னெடுங்காலமாக தனித்தன்மையான அடையாளங்களோடு ஈழத்தீவில் வாழ்கின்ற தமிழினம் தனது இருப்பைப் பாதுகாக்கவும் இழந்த தன் உரிமையை மீட்கவும் தன் தாயகத்தை மீட்பதே ஒரே வழி என உணர்ந்துகொண்டது.

இதனால், 1976 மே பதின்னான்காம் நாள் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் தந்தை செல்வா தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணியால் ‘தமிழர்களுக்குத் தனித்தமிழீழமே தீர்வு’ என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதுவே வட்டுக்கோட்டைத் தீர்மானம் ஆகும்.

ஈழத்தின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைத்து சுதந்திரமான, இறையாண்மையுள்ள தனி அரசாகத் தமிழீழம் அமைக்கப்படுவதை வலியுறுத்தி, தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு வலுச்சேர்த்த இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஐம்பது ஆண்டுகள் கடந்துவிட்டன.

அரசியல் வழியிலும் ஆயுத வழியிலும் தொடர்ந்து போராடிய எம்மினம் அளப்பெரும் அர்ப்பணிப்புகளைச் செய்தும் எமக்கான தேசம் மீட்கப்படவில்லை. நாம் அனைத்துலக அரங்கிலே தொடர்ந்து அமைதிவழியில் போராடுகின்றோம். ‘அறம் வெல்லும்’ என்று உறுதியாக நம்புகின்றோம். நாடு இழந்தவர்களாக வாழ்கின்ற இன்றைய எமது இழிநிலை அகல வேண்டும். எங்கள் தேசமாம் தமிழீழம் மீட்கப்பட வேண்டும்.

பன்மொழி ஆற்றல் மிக்க தமிழ் இளையோராகிய நாம், ‘வட்டுக்கோட்டைத் தீர்மானம்’ என்ற அரசியல் தீர்மானத்தை அனைத்துலக நாடுகள் அங்கீகரிக்கும் வரை தொடர்ந்து போராடுவோம். ஆயுதப் போராட்டம் எம்மீது திணிக்கப்பட்டது என்ற உண்மையையும் நாம் மிகப்பெரும் இன அழிப்பை எதிர்கொண்டுள்ளோம் என்பதையும் சான்றுகளோடு நிறுவுவோம். எமக்கான நீதியைப் பெறுவோம். வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைச் செயற்படுத்துவோம்.

நன்றி

வணக்கம்